# தினசரி சந்தை நிலவரம்:
# அலப்பன்ஹள்ளி விவசாயின் வெற்றிக்கதை

ராமச்சந்திரப்பா,
த/பெ. மாரியப்பா, அலப்பன்ஹள்ளி
ஒஸ்கோட்டே வட்டம்,
பெங்களூர் மாவட்டம்,
கர்நாடகா.
அலைபேசி எண்:09880488875



## அறிமுகம்:

எனது பெயர் திரு. சந்திரப்பா, த/பெ. மாரியப்பா. எனது ஊர் பெங்களூரில் இருந்து 23கி.மீ தொலைவில் ஒஸ்கோட்டே தாலுகாவில் உள்ள அலப்பன்ஹள்ளி கிராமம். நான் பி.ஏ. மற்றும் பி.எட் மற்றும் எல்.எல்.பி யை நிறைவு செய்துள்ளேன். நான் எனது படிப்பை முடித்தவுடன் விவசாயத்தை தொடங்கி கடந்த 20 வருடங்களாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன்.

## விளைவிக்கப்படும் பயிர்கள்:

எனது மொத்த விவசாய நிலம் 7 ஏக்கர். அதில் 4 ஏக்கர் ஆழ்துளை கிணற்றுப்பாசனம் ஏஞ்சியவை வானம் பார்த்த பூமி, நிலம் கரிசல் மண் வகையைச் சார்ந்தது. முக்கியமாக பயிர் செய்யப்படும் பயிர்கள் ரோஜா, கொத்தமல்லி மற்றும் நெல். ரோஜா செடியை ஜீன், ஜீலை மாதங்களில் நடவு செய்வேன். 1 ஏக்கரில் 6'x3' சதுர இடைவெளியில் நடவு மேற்கொள்கிறேன். உரங்கள் 15 மற்றும் 30 நாள் இடைவெளிகளில் தழை, மணி, சாம்பல் சத்துக்களுடன் நுண்ணூட்டங்களையும் கலந்து அளித்து வருவேன். தோட்டவேலைகள் அனைத்தும் எங்கள் குடும்பத்தினர் மூலமாகவே மேற்கொள்ளப்படும். வாரத்தில் 3 நாட்கள் அறுவடை செய்யப்படும். ஒவ்வொரு அறுவடையின் பொழுது 150 கிலோ பூக்கள் கிடைக்கும்.

## விற்பனை:

விற்பனைக்கு நாங்கள் உள்ளூர் ஒஸ்கோட்டே சந்தையையே சார்ந்து உள்ளோம். அங்கு வியாபாரிகள் எங்கள் பொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்வார்கள் மற்றும் பெரும்பாலான சமயங்களில் நாங்கள் நஷ்டத்தையே சந்தித்தோம்.

**தினசரி சந்தை நிலவரத்தினால் விவசாயம் லாபகரமானது:**

கே.ஆர் சந்தை ஆய்வாளர் திரு. ,சாந் அவர்கள் மூலமாக நாங்கள் தினசரி சந்தை நிலவரம் (DMI) பற்றிய விவரங்களை அறிந்தோம். அவர் எங்களுக்கு தினசரி சந்தை நிலவரம் (DMI) இணையதளத்தையும், தமிழ்நாடுவேளாண் பல்கலைக்கழகத்தையும் அறிமுகப் படுத்தினார். அவர் மூலமாக கே.ஆர்.சந்தையின் தினசரி நடவடிக்கைகளான சந்தையின் வகை, ஏலத்தை தன்மை, ஏலநேரம், பணப்பட்டுவாடா முறை போன்றவைகளை அறிந்தோம். நாங்கள் தினசரி சந்தை நிலவரத்தை(DMI) பற்றி நன்கு அறிந்ததினால் நாங்கள் பெங்களூர் சந்தை நிலவரத்தையும், உள்ளூர் ஒஸ்கோட்டே சந்தை நிலவரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். கே.ஆர் சந்தையின் விலை நிலவரம் உள்ளூர் சந்தையை விட அதிகமாக இருந்தது. இதனால் நான் கே.ஆர் சந்தைக்கு பூக்களை அனுப்பினேன். மேலும் லாபகரமான வருமானத்தை பெற்றேன். எங்கள் உற்பத்தி பொருட்களை அதிகபட்ச விலைக்கு விற்கும்பொழுது நான் விவசாயம் அதிக வருமானம் தரக்கூடியது என்பதனை உணர்ந்தேன். இது தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக சாத்தியமானது. இணையதளம் மூலம் பெறப்படும் இத்தகைய தகவல்கள் எங்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. விளைப்பொருட்களின் மொத்த விலை மற்றும் சில்லறைவிலை ஆகிய இருவிலைகளையும் இணைய தளத்தின் மூலம் காணமுடிவதினால் விலைகளை ஒப்பிட்டுப் பார்க்க இயலுகிறது. மேலும் இதற்கேற்றார்போல் அறுவடை சமயங்களை மாற்றி முன்னைக்காட்டிலும் லாபகரமான வருமானத்தை பெறமுடிகிறது. இதனால் எனது வாழ்க்கைதரம் வெகுவாக உயர்ந்துள்ளது. நான் தொடர்ந்து தினசரி சந்தை நிலவரத்தை பயன்படுத்துவேன். நான் எனது கிராமத்தில் உள்ள அணைத்து விவசாயிகளையும் தினசரி சந்தை நிலவரத்தை பயன்படுத்துமாறுகூறினேன். தினசரி சந்தை நிலவரமானது எராளமான விவசாயிகளின் சந்தைபடுத்துவதில் மாற்றம் செய்துள்ளது. மேலும் இத்தகைய

சேவையை வழங்கும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தினசரி சந்தை நிலவரத்திற்கு (DMI) காரணமான விஞ்ஞானிகளால் விவசாயிகள் மனநிறைவைப் பெற்றுள்ளார்கள். நான் தினசரி சந்தை நிலவரத்திற்கும் (DMI) மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.